# அல் குர்ஆன் பற்றிய விசேட தகவல்கள் 8

### 81. குர்ஆனுக்குப் பல பெயர்கள்.

اسماء القرآن الكريم

**اورد القرآن الكريم لنفسه بين اياته اسماء بالعشرات هي: الفرقان- الكتاب- النور- التنزيل- الكلام- الحديث- الموعظة- الهادي- الحق- البيان- المنير- الشفاء- العظيم- الكريم- المجيد- العزيز- النعمة- الرحمة- الروح- الحبل- القصص- المهيمن- الحكم- الذّكر- السراج- البشير- النذير- التبيان- العدل- المنادي- الشافي- الذكرى- الحكيم.**

**وقالوا اسماء اخرى للقرآن الكريم منها الميزان واحسن الحديث والكتاب المتشابه المثاني وحق اليقين والتذكرة والكتاب الحكيم والقيم وابلغ الوعّاظ**. அவை:

1) அல்ஃபுர்கான் 2) அல்கிதாப் 3) அந்நூர் 4) அத்தன்ஸீல் 5) அல்கலாம், 6) அல்ஹதீஸ், 7) அல்மவ்இளத், 8) அல்ஹாதீ, 9) அல்ஹக், 10) அல்பயான், 11) அல்முனீர், 12) அஷ்ஷிஃபா 13) அல்அளீம் 14) அல்கரீம் 15) அல்மஜீத் 16) அல்அஸீஸ் 17) அந்நிஃமா 18) அர்ரஹ்மத் 19) அர்ரூஹ், 20) அல்ஹப்லு, 21) அல்கஸஸ், 22) அல்முஹைமினு, 23)அல்ஹுக்மு, 24) அத்திக்ரு, 25) அஸ்ஸிராஜ், 26) அல்பஷீர் 27) அநந்தீர், 28) அத்திப்யான் 29) அல்அத்லு, 30) அல்முனாதீ, 31) அஷ்ஷாஃபி 32) அத்திக்ரா 33) அல் ஹகீம்.

மேலும் சில பெயர்களையும் குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர்

34) அல்மீஸான் 35) அஹ்ஸனுல் ஹதீஸ் 36) அல்கிதாபுல் முதஷாபிஹுல் மதானீ 37) ஹக்குல் யகீன் 38) அத்தத்கிரா 39) அல்கிதாபுல் ஹகீம் 40) அல்கையிம் 41) அப்லஉல் உஃஆள் (ابلغ الوعّاظ

### 82. 'அல்லாஹ்' என்ற சொல் குர்ஆனில் 2707 தடவைகள்

மாட்சிமை மிக்க 'அல்லாஹ்' (الله' لفظ الجلالة' ) என்ற சொல் குர்ஆனில் 2707 தடவைகள் வருகின்றன. அவற்றில் 980 தடவைகள் ' அல்லாஹு என்று ரஃபஹ்-உகரம்- குறியிட்ட சொற்களாகவும், 592 தடவைகள் அல்லாஹ என அகரம் குறியிட்டதாகவும், 1135 தடவைகள் 'அல்லாஹி' என இகரம் குறியிட்டதாகவும் வருகின்றன.

### 83. குர்ஆனில் நடுச் சொல்லும், நடு எழுத்தும்

குர்ஆனில் 'வல்யதலத்தஃப்' ('وليتلطّف') என்ற சொல் நடுச் சொல்லாகவும், அதிலுள்ள 'த' என்ற சொல் அதன் நடு எழுத்தாகவும் வருகின்றன.

### 84. மிகச்சிறிய வசனம் (ஆயத்)

குர்ஆனில் மிகச்சிறிய வசனம் யாஸீன் அத்தியாயத்திலுள்ள 'யாஸீன்' என்ற சொல்லாகும். சிலர் அர்ரஹமான் அத்தியாயத்தில் வரும் 'முத்ஹாம்மதானி' என்ற சொல்லே மிகச்சிறிய வசனம் எனக் கூறுகின்றனர்.

### 85. மிகப்பெரிய வசனம் (ஆயத்)

குர்ஆனில் வரும் மிகப்பெரிய வசனம் அல்பகரா அத்தியாயத்தில் வரும் 2:282–வது வசனமாகும்.

### 86. ஒரே தடவையாக அருளப்பட்ட அத்தியாயம்

சூரா இக்லாஸ்' என்றும், சூரா தவ்ஹீத் என்றும் அழைக்கப்படும் 112-வது அத்தியாயம் மட்டுமே ஒரே தடவையில் அருளப்பட்டது. ஏனைய அனைத்து அத்தியாயங்களும் பல தடவைகளாக அருளப்பட்டன.

### 87. அத்தியாயங்களின் பெயர் கரணங்கள்

அத்தியாயங்களின் முதற் சொல்லை வைத்தோ, அதில் கூறப்படும் செய்திகளில் வரும் ஏதேனும் ஒரு

சொல்லை வைத்தோ, அதில் வரும் கருத்தை வெத்தோ பெயர் சூட்டடப்பட்டுள்ளன.

உ-ம் : 1. முதற் சொல் : அல்ஹம்து, தாஹா, யாஸீன்,ஸாத், ( الحروف المقطعة )

அபஸ,அல்ஃபலக்,அந்நாஸ்

2. செய்திகளில் வரும் ஒரு சொல் : பகரா, ஆல-இம்ரான், அந்நிஸா,

அந்நஹ்லு, அந்நம்லு,

3. கருத்தைக் கொண்ட சொல் : அல்-இக்லாஸ், அத்தவ்ஹீத்.

குல்ஹுவல்லாஹ் அத்தியாயத்தில் இக்லாஸ்,தவஹீத், என்ற சொறக குள் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும் இதில் ஏகத்துவக் கொள்கை மட்டுமே கூறப்படுவதால் இதன் கருத்தை மையமாக வைத்து பெயர் சூட்டப்பட்டுள்ளன.

### 88. ஒரு அத்தியாயத்திற்கு பல பெயர்கள்

ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது. ஆனால் சில அத்தியாயங்களுக்கு பல பெயர்களும் உள்ளன.

உ-ம் : 1) சூராஅல்ஹம்துக்கு 20 க்கு மேற்பட்ட பெயர்கள் உள்ளன.

1) அல்-பாத்திஹா 2) உம்முல்கிதாப் 3) அஸ்ஸப்உல் மதானி 4) அல்கன்ஸு

5) அல்-வாஃபியா 6) அல்காபியா 7) அஷ்ஷாஃபியா போன்றவைகள்.

**الفاتحة- ام الكتاب- السبع المثاني- الكنز- الوافية- الكافية- الشافية وغير ذلك )**

2) பனூ இஸ்ராயீல் : அல்இஸ்ரா

3) அல்-முஃமின் : அல்ஃகாபிர்

4) அல்-இன்ஷிராஹ் : அஷ்ஷரஹ்

5) அல்-இக்லாஸ் : அத்தவ்ஹீத்

6) அல்-இன்ஸான் : அத்தஹ்ர்

### 89. ஹுரூபுல் முகத்தஆ அத்தியாயங்கள்

**(تسع وعشرون سورة تبدأ بالحروف المقطعة)**

ஹுரூபுல் முகத்தஆ (الحروف المقطعة) என்ற தனித்தனி எழுத்துகளில் துவங்கும் அத்தியாயங்கள் 19 ஆகும்.

### 90. அல்ஹம்து என்று துவங்கும் அத்தியாயங்கள் ( خمس سور تبدأ بـ'الحمد' )

அல்ஹம்து என்று துவங்கும் அத்தியாயங்கள் ஐந்தாகும். அவை:-

1) அல்-ஃபாத்திஹா 2) அல்அன்ஆம் 3) அல்கஹ்ஃபு, 4) ஸபஃ, 5. ஃபாத்திர்